**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

(Under Section ~~154 Cr.P.C.~~) 173 BNSS
~~(குற்ற விசாரணை முறை சட்டப்பிரிவு 154 இன் கீழ்)~~

C 8102122

1. District : மாவட்டம் திருப்பத்தூர் | PS: காவல்நிலையம் திருப்பத்தூர் ஊ.த.கண்கா | Year: ஆண்டு 2024 | FIR No.: மு.த.அ. எண் 01/2024 | Date: நாள் 10.12.2024

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 | Sections பிரிவுகள்: U/s 7(a) of PC(Amendment
   (ii) Act சட்டம்: as amended in PC(Amendment) | Sections பிரிவுகள்: Act 2018
   (iii) Act சட்டம்: Act-2018 | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 06.12.2024 | Date to : நாள் வரை 13.00 Hrs மற்றும் 15.00 Hrs
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 10.12.2024 | Time : நேரம் 08.00 Hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - II | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : ~~எழுத்து மூலம்~~ / வாய் மொழியாக வாக்குமூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 10KM தெற்கே
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி கொரட்டி கிராமம் வாரி நிலம் அமைந்துள்ள இடத்தில் மற்றும் எதிரி வெண்ணிலா வீட்டினிடம்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் கி.மு. சிங்கன் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் முனிராஜ்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 42 years | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் | (g) Address : முகவரி எண். 254, தண்டுகானூர் கிராமம், கொரட்டி பஞ்சாயத்து, திருப்பத்தூர் தாலுக்கா, திருப்பத்தூர் மாவட்டம், கைபேசி எண்: 9080496500

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திருமதி. வெண்ணிலா, கிராம உதவியாளர், கொரட்டி கிராமம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   வாதியால் கால தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரனை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

10.12.2024 10/12/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 10.12.2024

Name: பெயர் B. கௌரி
Rank: நிலை ......................

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

**பணிந்து அனுப்பப்படுகிறது:-** இன்று 10.12.2024 ஆம் தேதி காலை 07.30 மணியளவில் நான் நிலைய ஆஜரில் இருந்த போது திரு.முருகன் த/பெ முனிராஜ், எண்-254 தண்டுகானூர் கிராமம், கொரட்டி பஞ்சாயத்து, திருப்பத்தூர் தாலுக்கா, திருப்பத்தூர் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் வாக்குமூலத்தின் விவரம் பின்வருமாறு:- திரு. மு.முருகன் வயது-42 த/பெ முனிராஜ், எண்-254 தண்டுகானூர் கிராமம், கொரட்டி பஞ்சாயத்து, திருப்பத்தூர் தாலுக்கா, திருப்பத்தூர் மாவட்டம் என்பவரது வாக்குமூலம். கைப்பேசி எண் - 9080496500 நான் மேற்படி விலாசத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் பழைய இரும்பு வாங்கி விற்கும் வியாபாரம் செய்து வருகிறேன். என் மனைவி பெயர் நதியா. நாங்கள் கடந்த 2018 ஆம் ஆண்டு திருப்பத்தூரை சேர்ந்த ராஜகோபால் என்பவரிடமிருந்து கொரட்டி கிராமத்தில் (சர்வே எண் 456/2A1) 6 ¼ செண்ட் நிலத்தை என் மனைவி நதியா பெயரில் வாங்கி பத்திர பதிவு செய்தோம். நாங்கள் வாங்கிய இடத்தின் பட்டாவானது ராஜகோபால் என்பவரின் பெயரிலேயே இருக்கிறது. அந்த இடத்தின் பட்டாவை என் மனைவி நதியா பெயரில் மாற்ற கடந்த 3.12.2024 ஆம் தேதி கொரட்டி இ-சேவை மையத்தில் என் மனைவி பெயரில் பட்டா மாற்ற ஆன்லைன் அப்ளிகேசன் போட்டேன். பின்னர் ரெண்டு நாள் கழித்து 5.12.2024 ஆம் தேதி 6379191679 என்ற நெம்பரிலிருந்து என் மனைவி நெம்பருக்கு போன் செய்து நான் சர்வேயர் பேசுறேன் உங்க இடத்தை அளக்க உங்களுடைய நிலம் சம்மந்தமான எல்லா ரெக்கார்டுகளையும் எடுத்துக்கிட்டு கொரட்டி VAO ஆபிஸ் வாங்கன்னு சொல்லியுள்ளார். அன்று நான் ஊரில் இல்லாததால் என் மனைவி சர்வேயரிடம் எங்க வீட்டுக்காரர் வெளிய போயிருக்கார் வந்தவுடன் வந்து பார்ப்பதாக சொல்லியிருந்தார். என் மனைவி எனக்கு இந்த தகவலை சொன்னார். அடுத்தநாள் 6.12.2024 ஆம் தேதி காலை மறுபடியும் என் மனைவி போனிற்கு சர்வேயர் கூப்பிட்டு எங்க நிலத்தின் ரெக்கார்டுகளை எடுத்துக் கொண்டு உடனடியாக கொரட்டி VAO ஆபிஸ் வரசொன்னார். நான் சுமார் காலை 10.30 மணிக்கு கொரட்டி VAO ஆபிஸ் போய் பார்த்தேன். அப்போது ஆபிஸில் யாரும் இல்லை. அங்கு விசாரித்த போது பீல்டுக்கு போயிருக்கார் ஒரு மணிநேரத்துல வந்துடுவார்ன்னு சொன்னாங்க. நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். பின்னர் திரும்பவும் மதியம் 12.00 மணிக்கு நான் VAO ஆபிஸிடம் போய் பார்த்த போது அங்கு சிப்பந்தி திருமதி.வெண்ணிலாவும் சர்வேயரும் அங்கு இருந்தனர். அப்போது சர்வேயர் என்னிடம் ரெக்கார்டுகளை வாங்கி பார்த்தார். பின்னர் நாங்கள் மூவரும் எங்களுடைய நிலத்திற்கு சென்றோம். அந்த இடத்தில் சர்வேயர் கொஞ்ச நேரம் எங்க இடத்தை அளந்தார். அப்போது நானும் சிப்பந்தி வெண்ணிலாவும் கூட ஒத்தாசியாக இருந்தோம். எங்க இடத்தை அளந்து முடிச்சதும் மதியம் சுமார் 01.00 மணிக்கு சிப்பந்தி வெண்ணிலா என்னிடம் இடத்தினை சப்டிவிசன் செய்து பட்டா மாற்ற ரூபாய் 7000/- வேண்டுமென்று கேட்டார். அப்போது அந்த சர்வேயரும் எங்களுடன் இருந்தார். நான் சிப்பந்தியிடம் எதுக்கு இவ்ளோ பணமுன்னு கேட்டதுக்கு ஆபிஸ் செலவுக்கும் VAO மற்றும் சர்வேயரையும் நான் கவனிக்கனும் இது எனக்கு மட்டும் இல்லைன்னு சொன்னார். நான் சிப்பந்தியிடம்

நான் கஷ்டப்படுறவன் கொஞ்சம் பாத்து சொல்லுங்கன்னு கெஞ்சி கேட்டேன். அதற்கு சிப்பந்தி உங்களுக்காக கடைசியா ரூ.5000/- கொடுத்துடங்கன்னு சொன்னார். அதற்கு நான் என்னால அவ்வளவு பணம் தரமுடியாதுன்னு சொன்னதுக்கு ரூ.5000/- ன்னா பாருங்க இல்லைனா உங்க வேலை ஆகாதுன்னு கோபமாக சொல்லிவிட்டு சிப்பந்தியும் சர்வேயரும் ஒரே டூவிலரில் கிளம்பிவிட்டார்கள். அங்கிருந்து போன கொஞ்ச நேரத்தில் சிப்பந்தி வெண்ணிலா எனக்கு 8946076227 என்ற நெம்பரிலிருந்து போன் செய்து சர்வேயர் VAO ஆபிஸில் வெயிட்பன்றார் பணத்தை எடுத்துட்டு வாங்க அவரு ரொம்ப டென்சன் ஆகிறார் சிக்கிரம் வாங்கன்னு போனில் கூப்பிட்டார். நான் VAO ஆபிஸிடம் போய் பார்த்தபோது ஆபிஸ் பூட்டியிருந்தது. நான் சிப்பந்தி வெண்ணிலாவுக்கு போன் செய்த போது சர்வேயர் கிளம்பி போய்விட்டார். நானும் வீட்டிற்கு வந்துட்டேன் எதுவா இருந்தாலும் வீட்டான்ட வாங்கன்னு சொல்லிட்டார். நான் சுமார் மதியம் 3.00 மணிக்கு சிப்பந்தி வீட்டிடம் சென்று அவரை பார்த்த போது சிப்பந்தி வெண்ணிலா என்னிடம் சர்வேயர் எல்லா ரெக்கார்டையும் எங்கிட்ட கொடுத்துட்டு போயிட்டார். நீங்க பணம் கொடுத்தால்தான் பணத்தையும் உன்னுடைய ரெக்கார்டையும் எடுத்துக்கிட்டு போய் அவரை பார்ப்பேன். பணம் இல்லைனா உங்க ரெக்கார்டு எல்லாமே அப்படியே எங்கிட்டத்தான் இருக்கும் உங்க வேலை ஆவாதுன்னு சொல்லிட்டார். நான் திரும்பவும் சர்வேயருக்கு போன் செய்த போது அவர் நான் வேலையா இருக்கன்னு போனை கட் செய்துவிட்டார். திரும்பும் அவரை கூப்பட்டதற்கு என் போனை அவர் எடுக்கவில்லை. எனக்கு இலஞ்சம் கொடுத்து வேலையை முடிக்க விருப்பமில்லை. மேலும் நான் கூலி வேலைசெய்வதால் என்னால் உடனடியாக சிப்பந்தி கேட்ட இலஞ்சபணம் ரெடிபண்ண முடியவில்லை. அந்த பணத்தை ஏற்பாடு பண்ணிக்கிட்டு வர எனக்கு நான்கு நாளாச்சு. எனவே என்னிடம் இலஞ்சம் கேட்கும் சிப்பந்தி வெண்ணிலா மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். படித்துப்பார்த்தேன் சொன்னபடி உள்ளது. இப்படிக்கு, (Sd/- XXXX) M.Murugan.10.12.2024. Sir, Statement Recorded by me on 10.12.2024 at 08.00 hrs, after verifying the antecedents of the accused and credibility of the complainant on 10.12.2024 at 09.30 hrs registered a case in Tirupathur V&A.C. Crime No.01/2024 u/s 7 (a) of the Prevention of Corruption Act-1988 as amended by Prevention of Corruption (Amendment) Act,2018 (Sd/- XXXX)10.12.2024 (B.Gowri) Inspector of Police, Vigilance and Anti- Corruption, Tirupathur.

The FIR in original along with the complaint and its enclosures sent to the Hon'ble CJM cum Special Judge, Tirupathur and sent the other copies to the officers concerned.

10/12/2024

Inspector of Police
Vigilance & Anti-Corruption
Tirupathur